# பாடம் 23: இறுதிப் பலியான இயேசு

**விசுவாசத்தைக் கற்பிப்போருக்கான அறிவுறுத்தல்**

| | |
|---|---|
| அடிப்படை நிலை (7 வயது) | : 1 முதல் 6 கருத்துகளைக் கற்பிக்கவும் |
| இடைப்பட்ட நிலை (10 வயது) | : 1 முதல் 10 கருத்துகளைக் கற்பிக்கவும் |
| மேம்பட்ட நிலை (13 வயது) | : 1 முதல் 13 கருத்துகளைக் கற்பிக்கவும் |

**முந்திய பாடத்தில் இருந்து மீள்பார்வை:**
முந்திய பாடத்தில், இயேசு ஏன் கடவுளின் மக்களான யூதர்களோடு இருக்க அனுப்பப்பட்டார், இருந்தாலும் அவர் அவர்களால் புறக்கணிக்கப்பட்டார் என்பதை நாம் கற்றோம். இறுதியாக, அவர் செய்யாத குற்றத்திற்காக தண்டிக்கப்பட வேண்டுமென அவர்கள் கோரினர், மேலும் அவர் கொடூரமாக சிலுவையில் கொல்லப்பட்டார். இந்த பாடத்தில், இவ்விதமான வன்முறைச் சாவுக்கு இயேசு தம்மை அனுமதித்தது ஏன் என்பதைப் பற்றி நாம் கற்போம்.

**தற்போதைய பாடம்:**
1. இயேசுவின் பாடுகள் (துன்பங்கள்), சிலுவையில் அறையப்படல் மற்றும் இறப்பை மத்தேயு 26:36 - 27:50ல் வாசிக்கவும்.

2. இயேசு ஏன் இவ்விதமாக இறக்க வேண்டும் என்னும் கேள்வி சிலருக்கு குழப்பத்தை ஏற்படுத்தலாம். இயேசுவின் துன்புறல் மற்றும் இறப்பைப் புரிந்து கொள்வது, அவரது சொந்த மக்களான யூதர்களின் சமய வாழ்வைப் புரிந்து கொள்வதில் இருக்கிறது.

மெசியா (*மஷியாக்* என்ற எபிரேய வார்த்தையில் இருந்து வருகிறது, அதன் பொருள் "திருப்பொழிவு செய்யப்பட்டவர்"), இயேசு கிறிஸ்து மனித வரலாற்றின் ஒரு குறிப்பிட்டக் காலத்தில் வந்தார், மேலும் அவர் ஒரு குறிப்பிட்ட இனத்தின் ஒரு குறிப்பிட்ட குலத்தில் பிறந்தார். அவர் யூதராக இருந்தார். இதன் காரணம் எல்லாவற்றுக்கும் முதலாக கடவுள் தமது மீட்புத் திட்டத்தை யூதர்களுக்கு வெளிப்படுத்தினார், யூதர்கள் வழியாக கடவுளின் மீட்புத் திட்டத்தை மற்ற எல்லா மக்களினங்களும் அணுக முடியும்.

மனிதகுலத்தைப் பாவம் கடவுளிடம் இருந்து பிரிக்கின்ற பொழுது, அவர்களைத் தம்முடன் ஒப்புரவாக்கும் பலி முறைமையையும் கடவுள் இந்த யூதர்களுக்கு வெளிப்படுத்தினார். முற்கால யூதர்கள் சிக்கலான பலி முறைமையைக் கொண்டிருந்தனர். அவர்கள் ஐந்து விதமான பலிகளைக் கொண்டிருந்தனர்: எரி பலி, உணவு பலி, அமைதி பலி, பாவம்போக்கும் பலி, மற்றும் சினந்தணிக்கும் பலி (லேவியர் 1-7). ஒவ்வொரு பலியும் வருகின்ற மெசியாவின் பலியின் முன்நிழலாக இருந்தது. ஒவ்வொரு பலியும் அவரைச் சுட்டிக் காட்டியதுடன் அவரில் தனித்துவமாக நிறைவேறியது.

3. *யோம் கிப்புர்* மற்றும் *பாஸ்கா* ஆகிய பலிகள் யூதர்களால் *கொர்பானொத்* (*கொர்பான்* என்பதன் பன்மை) என்று அறியப்பட்டன. இந்த பலிகள் பொதுவில் கொண்டுள்ள அம்சம் குருதி சிந்துதல், ஏனெனில் குருதி சிந்துதலின் வழியாகவே பாவக்கழுவாய் ஏற்படும் (லேவி 17:11; எபி 9:22). மற்ற வார்த்தைகளில், *யோம் கிப்புர்* மற்றும் *பாஸ்கா* நேரத்தில் செலுத்தும் பலிகள் குருதி பலிகள். சிலுவையில் இயேசுவின் பலி முற்கால இஸ்ரயேலரின் பாவக் கழுவாய் (*யோம் கிப்புர்*) மற்றும் கடப்பு (*பாஸ்கா*) பலிகளை நிறைவேற்றுவதாக இருந்தது.

4. **பாவக்கழுவாய் நாள் (*யோம் கிப்புர்*).** இயேசுவின் காலத்தில், இந்த பாவக்கழுவாய் நாள் மிக முக்கிய நாளாக இருந்தது, இயேசுவும் அவரது மக்களும் அதை "அந்த நாள்" என்று வட்டப்பெயரில் அழைத்தனர். *யோம் கிப்புர்* என்பது, மிக எளிதாக, முற்கால இஸ்ரயேலர் முந்திய ஆண்டில் செய்தப் பாவங்களுக்கு கழுவாய் செலுத்தும் நாள்.

("பாவக்கழுவாய்" என்ற வார்த்தை நுணுக்கமானதாகவும் குழப்புவதாகவும் ஒலிக்கலாம், ஆனால் நமது பாவங்கள் நம்மை எப்படி கடவுளிடம் இருந்து பிரிக்கின்றன, மேலும் பலி செலுத்துவதன் வழியாக நாம் எப்படி மீண்டும் ஒருமுறை கடவுளோடு "ஒன்றாக" முடியும் என சிந்திக்க முயற்சியுங்கள். பாவக்கழுவாய் என்பதை 'ஒன்றித்தல்' என்றும் கூறலாம்.)

யோம் கிப்புரில் நிகழும் சடங்குமுறை குறித்த மிக விரிவான விவரிப்பை பழைய ஏற்பாட்டில் லேவியர் நூலின் 16வது அதிகாரத்தில் காணலாம். அத்தருணத்தில் தேர்ந்தெடுக்கப்படும் தலைமைக் குரு தமது பாவத்திற்காகவும் இஸ்ரயேலின் பிற குருக்களின் பாவங்களுக்காகவும் ஒரு காளையைப் பலியிட வேண்டும். பிறகு அவர் இந்தக் காளையின் குருதியை கடவுளின் மாட்சி (எபிரேயத்தில்: *ஷெக்கினா*) தங்கியிருந்த உடன்படிக்கைப் பேழையிடம் கொணர வேண்டும். இந்த உடன்படிக்கைப் பேழை கோவிலின் மிகத் தனிப்பட்ட அறையில் இருந்தது, அது மிகத்தூய இடம் அல்லது திருத்தூயகம் என்று அழைக்கப்பட்டது. அவர் பலியிடப்பட்ட காளையின் குருதியை பேழையின் மேற்பகுதியில் (அது இரக்கத்தின் இருக்கை என்று அழைக்கப்பட்டது) தெளிக்கப்பட்டது. இது ஆண்டுக்கு ஒருமுறை மட்டும் நிகழ்த்த வேண்டியச் சடங்காக இருந்தது.

அடுத்து, மக்கள் இரண்டு வெள்ளாடுகள் அல்லது ஆட்டுக்குட்டிகளை தலைமைக் குருவின் முன்பு கொணர வேண்டும். சீட்டுப்போடுதல் மூலம் ஓர் ஆடு கடவுளுக்கு காணிக்கையாகவும், மற்றது போக்குஆடாகவும் தேர்ந்தெடுக்கப்படும். அவ்வாறே, பலியிடப்பட்ட ஆட்டின் குருதி திருத்தூயகத்துக்கு கொணரப்பட்டு, இரக்கத்தின் இருக்கையின் மீது தெளிக்கப்பட வேண்டும். காளை, ஆடு ஆகிய இரு விலங்குகளின் குருதியும் பின்பு கலக்கப்பட்டு, பலிப்பீடத்தின் மீது தெளிக்கவும் பூசவும்படும்.

போக்குஆடு என்று அறியப்படும் மற்ற ஆட்டின் தலைமீது குரு தனது கையை வைத்து இஸ்ரயேலின் பாவங்களை அதன்மீது ஒப்புவிப்பார், அது மக்களின் பாவங்களை ஆட்டிற்கு மாற்றுவதாகும். பிறகு அந்த ஆடு பாலைநிலத்திற்கு இட்டுச் செல்லப்பட்டு ஒரு செங்குத்தான பாறையின் மீது விடப்படும். (தற்போது நீங்கள் அறிந்திருப்பீர்கள், போக்குஆடு என்ற கருத்துரு எங்கிருந்து வந்ததென்று!)

5. எபிரேயருக்கானத் திருமுகத்தில், பெரிய தலைமைக் குருவாகிய இயேசு நேர்த்தியான நிரந்தரப் பலியாகத் தம்மையே செலுத்தினார் என்று நமக்கு கூறப்பட்டுள்ளது, இவ்வாறு நம் எல்லாரின் பாவங்களுக்கு கழுவாயாக தமது குருதியைச் சிந்தினார். இனிமேல் விலங்குகள் பலியிடப்படத் தேவையில்லை என்பதை இது காட்டுகிறது.

*எபிரேயர் 9:11-15*: "ஆனால், இப்போது கிறிஸ்து தலைமைக் குருவாக வந்துள்ளார், அவர் அருளும் நலன்கள் இப்போது நமக்கு கிடைத்துள்ளன. அவர் திருப்பணி செய்யும் கூடாரம் முன்னதைவிட மேலானது, நிறைவு மிக்கது. அது மனிதர் கையால் அமைக்கப்பட்டது அன்று, அதாவது, படைக்கப்பட்ட இவ்வுலகைச் சார்ந்தது அன்று. அவர் பலியாகப் படைத்த குருதி வெள்ளாட்டுக் கிடாய்கள், கன்றுக்குட்டிகள் ஆகியவற்றின் குருதி அல்ல, அவரது சொந்தக் குருதியே. அவர் ஒரே ஒருமுறை தூயகத்திற்குள் சென்று எக்காலத்திற்குமென அதைப் படைத்து நமக்கு என்றுமுள்ள மீட்பு கிடைக்கும்படி செய்தார். வெள்ளாட்டுக் கிடாய்கள், காளைகள் இவற்றின் குருதியும், கிடாரியின் சாம்பலும் தெளிக்கப்படும்போது, சடங்குமுறைப் படி அவர்கள் தூய்மை பெறுகிறார்கள். ஆனால் கிறிஸ்துவின் குருதி, வாழும் கடவுளுக்கு நாம் வழிபாடு செய்யுமாறு, சாவின் செயல்களில் இருந்து நம் மனச்சான்றை எவ்வளவு மிகுதியாய்த் தூய்மைப்படுத்துகிறது. ஏனெனில் என்றுமுள்ள தூய ஆவியினால் தம்மைத்தாமே கடவுளுக்கு மாசற்ற பலியாகக் கொடுத்தவர் அவரே. இவ்வாறு, அவர் புதிய உடன்படிக்கையின் இடையாளராய் இருக்கிறார். கடவுளால் அழைக்கப்பட்டவர்கள் அவரால் வாக்களிக்கப்பட்ட நித்திய உரிமைப்பேற்றைப் பெறுவதற்கென்று இந்த உடன்படிக்கை உண்டானது. இது ஒரு சாவின் மூலம் ஏற்படுத்தப்பட்டது. இந்தச் சாவு முந்திய உடன்படிக்கையை மீறிச் செய்த குற்றங்களிலிருந்து மீட்பளிக்கிறது."

எபிரேயர் திருமுகத்தில் உள்ள இந்தப் பத்தி, பெரிய தலைமைக் குருவான இயேசு கிறிஸ்து எல்லா மக்களுக்காகவும் தமது சொந்தக் குருதியைப் பலியாக்கினார், இந்தப் பலி காலம் கடந்து எல்லா நித்தியத்திற்கும் நன்மையாக இருக்கிறது என்று நமக்கு கூறுகிறது.

6. ஆனால் நமது புனித மறைநூல் எபிரேயரில் உள்ள கடவுளுக்கானப் பலியாகத் தேர்வு செய்யப்பட்ட ஆட்டுக்கும் இயேசுவுக்கும் இடையிலானத் தொடர்பை மட்டும் பேசவில்லை. இது இயேசுவுக்கும் போக்குஆட்டுக்கும் இடையிலானத் தொடர்பையும் சுட்டுகிறது. கொரிந்தியருக்கு புனித பவுலின் இரண்டாம் திருமுகம் கூறுகிறது, "நாம் கிறிஸ்து வழியாகத் தமக்கு ஏற்புடையோர் ஆகுமாறு, கடவுள் பாவம் அறியாத அவரைப் பாவநிலை ஏற்கச் செய்தார்" (2கொரி 5:21). முற்கால இஸ்ரயேல் மக்களின் பாவங்கள் போக்குஆட்டின் மீது மாற்றப்பட்டது போன்று, நமது பாவங்கள் கிறிஸ்துவுக்கு மாற்றப்பட்டன. பழைய ஏற்பாட்டில் போக்குஆடு

இஸ்ரயேலின் பாவங்களைச் சுமந்தது போன்றே, நம் ஆண்டவர் இயேசுவும் நமது பாவங்களின் சுமையைத் தம்மீது ஏற்றுக்கொண்டார்.

இயேசுவுக்கும் போக்குஆட்டிற்கும் இடையிலான வேறுபாடு யாதெனில், போக்குஆடு வெறுமனே மக்களின் பாவங்களை மாற்றவும் நகர்த்தவுமே இருந்தது, இங்கு இயேசு கிறிஸ்து உலகின் பாவங்கள் எல்லாவற்றின் பழுவையும் தம்மீது சுமந்து மற்றெவருக்கும் எதையும் கடத்தாமல் சிலுவையில் இந்தப் பாவங்களுக்காக கழுவாய் நிறைவேற்றினார்.

7. **கடப்பு** (***பாஸ்கா***). பாஸ்காவின் ஆண்டு கொண்டாட்டம் முற்கால இஸ்ரயேலர் எகிப்தில் இருந்து கி.மு. 1250ல் விடுதலை அடைந்ததோடு தொடர்புடையது. வாழ்வை அச்சுறுத்தியப் பஞ்சத்தின் காரணமாக, யாக்கோபும் அவரது மகன்களும் (தங்கள் குடும்பங்களோடு சேர்ந்து), அவரது பதினோராவது மகன் யோசேப்பின் அழைப்பை ஏற்று கானானில் இருந்து எகிப்துக்குச் சென்றனர். யோசேப்பு அதற்கு சில ஆண்டுகள் முன்பு பார்வோனின் அலுவலர்களில் ஒருவரான போத்திபாருக்கு அடிமையாக விற்கப்பட்டிருந்தார்.

பார்வோனின் உதவியாளராக இருந்த யோசேப்பு தலைமையில் மிகச் செழிப்பான காலத்தை அனுபவித்தப் பிறகு, வளர்ச்சியுற்ற எகிப்திய அரசில் பதவியேற்றப் புதிய பார்வோன் இஸ்ரயேலரை அடிமைத்தனத்திற்குள் கட்டாயமாகத் தள்ளத் தொடங்கினான். இந்தக் கொடூர அடிமைப்படுத்தல் நடைமுறை பல நூறு ஆண்டுகள் தொடர்ந்தது. ஆனால் இஸ்ரயேல் இறை உதவிக்காகக் கூக்குரலிட்டனர், விடுதலைப்பயணம் 2:24ல் மறைநூல் நமக்கு கூறுகிறது, ‘‘அவர்களது புலம்பலை கடவுள் கேட்டார்; ஆபிரகாம், ஈசாக்கு, மற்றும் யாக்கோபுடனான தமது உடன்படிக்கையை கடவுள் நினைவுகூர்ந்தார்’’. அவர்களை எகிப்திய அடிமைத்தனத்தில் இருந்து அவர் விடுவித்தார்.

விடுதலைப்பயணம் நூலில் இருந்து ஒருவர் வாசிக்கலாம் அந்தச் சதியில் ஒரு திருப்பமாக, எகிப்திய அடிமைத்தனத்தில் இருந்து தமது மக்களை விடுவிக்க கடவுள் மோசேயை அனுப்பினார். தொடக்கத்தில், இஸ்ரயேலரைக் அடிமைக்கட்டில் இருந்து விடுவிப்பதற்கான கடவுளின் கோரிக்கைக்காக மோசே ஒன்பது அறிகுறிகளைச் செய்திருந்தாலும், பார்வோன் மனம் மாறவில்லை. இறுதியாக, கடவுள் மோசேயிடம் இஸ்ரயேலரது ஒவ்வொரு குடும்பமும் ஒரு வயதுள்ள, குறையற்ற, ஆண் ஆட்டுக்குட்டியை எடுத்து, அதை நண்பகலில் வெட்டக் கட்டளையிட்டார். ஆட்டுக்குட்டியின் குருதி கதவு நிலைகளிலும் வீட்டின் மேல்சட்டத்திலும் பூசப்பட வேண்டும். மாலையில், அந்தக் குடும்பம் ஆட்டுக்குட்டியின் சுட்ட இறைச்சியை புளிப்பற்ற அப்பத்தோடும் கசப்புக் கீரைகளோடும் உண்ண வேண்டும். அந்த இரவில், சாவின் வானதூதர் குருதியால் பாதுகாக்கப்பட்ட வீடுகளைக் ‘‘கடந்து செல்வார்’’, ஆனால் குருதியால் பாதுகாக்கப்படாத வீடுகளின் தலைப்பிள்ளைகளின் உயிரைப் பறிப்பார். பார்வோன் உள்பட பல எகிப்தியரின் வீடுகள் தங்களது தலைப்பேற்றை அந்த இரவில் இழந்தன. இந்த பத்தாம் பெருந்துன்பத்தின் விளைவாக, இஸ்ரயேலர் எகிப்திய அடிமைத்தனத்தில் இருந்து விடுவிக்கப் பெற்றனர்.

அவர்களின் விடுதலையின்போது, இஸ்ரயேலர் ஒவ்வோர் ஆண்டும் பாஸ்கா ஆட்டுக்குட்டியின் பலி உணவோடு தொடங்கி ஏழு நாள் புளிப்பற்ற அப்ப விழாவாகத் தொடரும் பாஸ்கா கொண்டாட்டத்தின் வழியாக இந்நிகழ்வை நினைவுகூருமாறு கடவுள் கட்டளையிட்டார். ‘‘பாஸ்கா’’ (கடப்பு) என்ற பதம், எகிப்பதின் பத்து பெருந்துன்பங்களில் இறுதியானதில் தமது மக்களை அடிமைத்தனத்தில் இருந்து மீட்க இஸ்ரயேலரின் வீடுகளை கடவுள் எப்படி ‘‘கடந்து சென்றார்’’ என்பதைப் பற்றிப் பேசுகிறது.

8. தற்போது, பாஸ்காவின் வரலாற்றுச் சூழமைவைப் புரிந்துகொண்ட நிலையில், நாம் மெசியா இயேசுவைப் பற்றிப் புனித மறைநூல் காட்டுவதை நோக்கி நமது கவனத்தைத் திருப்புவோம். விவிலியம், பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் இரண்டுமே, உறுதியாக இயேசுவை பாஸ்கா பலியின் இறுதி நிறைவேற்றமாகச் சுட்டுகின்றன.

பழைய ஏற்பாட்டு இறைவாக்கினர்கள் ‘‘கடவுளின் ஆட்டுக்குட்டி’’ என்ற உருவகத்தை நிலையாக மெசியாவை விவரிக்கப் பயன்படுத்தினர். எடுத்துக்காட்டாக, எசாயா பின்வருமாறு இறைவாக்குரைத்தார்: ‘‘அவர் ஒடுக்கப்பட்டார், சிறுமைப்படுத்தப்பட்டார், ஆயினும் அவர் தம் வாயைத் திறக்கவில்லை; அடிப்பதற்கு இழுத்துச் செல்லப்பட்ட ஆட்டுக்குட்டி போலும், உரோமம் கத்தரிப்போர் முன்னிலையில் கத்தாத செம்மறி போலும் அவர் தம் வாயைத்

திறவாதிருந்தார்'' (எசா 53:7). இந்த உருவகம் இரண்டு பரிமாணங்களை வழங்குகிறது. முதல் பரிமாணம் மெசியா துன்புறும் ஊழியராக இருப்பார், மற்றொன்று உலகின் பாவங்களுக்கு கழுவாயான பலி ஆட்டுக்குட்டியாக மெசியா இருப்பார். மிகப் பின்னர், திருத்தூதர் பணிகள் 8:26ல், திருத்தொண்டர் பிலிப்பு (எத்தியோப்பிய அண்ணகருடன் இந்தப் பத்தி பற்றிப் பேசும் பொழுது) எசாயா 53:7ல் உள்ள இந்த இறைவாக்கை நிறைவேற்றிய ஒருவராக இயேசுவை அடையாளப்படுத்தியதை நாம் காண்கிறோம்.

நற்செய்திகளிலும், இயேசு எப்படி அர்ப்பணப் பலி மற்றும் துன்புறும் ஊழியராக ''கடவுளின் ஆட்டுக்குட்டி'' என்று குறிப்பாக விவரிக்கப்படுகிறார் என்பதை நாம் காண்கிறோம். திருமுழுக்கு யோவான் யோர்தான் நதிக்கு வரும் இயேசுவைக் கண்டதும், ''இதோ, உலகின் பாவங்களைப் போக்கும் கடவுளின் ஆட்டுக்குட்டி'' என்று தயக்கமின்றி அறிவித்தார் (யோவா 1:29).

மத்தேயு 20:26-28ல், இயேசு தாமே, தமது பாடுகள், இறப்பு, மற்றும் உயிர்ப்பு பற்றி மூன்றாம் முறையாக இறைவாக்குரைத்தபோது கூறினார், ''உங்களிடையே பெரியவராக இருக்க விரும்புகிறவர் உங்கள் தொண்டராய் இருக்கட்டும். உங்களுள் முதன்மையானவராக இருக்க விரும்புகிறவர் உங்களுக்குப் பணியாளராக இருக்கட்டும். இவ்வாறே மானிட மகனும் தொண்டு ஏற்பதற்கு அன்றி தொண்டு ஆற்றுவதற்கும், பலருடைய மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்''.

9. மத்தேயு 26:17-30 இயேசு எப்படி பாஸ்கா பலியின் நிறைவேறுதலாக இருக்கிறார் என்பதையும் காட்டுகிறது. மேல்மாடி அறையில், இயேசு பாஸ்கா உணவைத் தமது சீடர்களோடு கொண்டாடினார். பாஸ்கா உணவின்போது, அதில் பங்கேற்போர் நான்கு கோப்பை திராட்சை ரசத்தை (இடையிடையே) உணவு முழுவதும் குடிக்க வேண்டும். ஒவ்வொரு கோப்பைக்கும் இடையே பின்பற்ற வேண்டியச் சடங்குகள் உண்டு. இந்த நிகழ்வுரையில், இரண்டாம் கோப்பை திராட்சை ரசத்திற்குப் பிறகு, மூன்றாவது கோப்பை திராட்சை ரசத்தைக் குடிக்கும்போது நற்கருணை நிறுவப்படுவதை நாம் காண்கிறோம் (இங்கு இது நற்கருணை கிண்ணமாக ஆகிறது). ஆனால் இயேசு இவ்வேளையில் ஒரு வினோதக் கூற்றை மொழிகிறார், தமது தந்தையின் அரசில் தமது சீடர்களோடு அவர் குடிக்கும் வரை, அவர் இனிமேல் ஒருபோதும் திராட்சை ரசத்தைக் குடிக்கப்போவதில்லை என்கிறார். முறைப்படி, இந்தக் கொண்டாட்டத்தை முழுமைப்படுத்தும் விதமாக புகழ்ப்பாடல் பாடிவிட்டு அவர்கள் நான்காம் கோப்பையைக் குடிக்க வேண்டும்; ஆனால் அந்த இரவில் நான்காம் கோப்பை குடிக்கப் படவில்லை.

மத்தேயு 27:33-34ல், இயேசு சிலுவையில் அறையப்படுவதற்குச் சன்று முன்பு அவருக்கு வழங்கப்பட்ட திராட்சை ரசத்தைக் குடிக்கத் தொடர்ந்து மறுக்கிறார். எனினும், யோவான் 19:28-30ல், தமது எய்துபணி முழுமையுற்றதை அறிந்து, இயேசு புளித்த திராட்சை ரசத்தை, நான்காம் கோப்பையை, பாஸ்கா பலியின் முழுமையைக் குறிக்கும் விதமாகக் குடித்து, இவ்வாறு முடித்தார், ''எல்லாம் நிறைவேறிற்று'' (பல மொழிபெயர்ப்புகள் இந்த வார்த்தைகளை ''முடிந்தது'' அல்லது ''முழுமையடைந்தது'' என்கின்றன). சிலுவையில் தொங்கிய இயேசு நான்காம் கோப்பையைக் குடித்தப் பிறகே பாஸ்கா கொண்டாட்டம் முழுமையுற்றதை இந்தப் பத்திகள் காட்டுகின்றன. அவர் நான்காம் கோப்பையை அப்போது குடிக்கத் தேர்ந்துகொண்டது ஏனெனில் ஆட்டுக்குட்டி ஏற்கெனவே பலியாக அடிக்கப்பட்டு விட்டது. இந்தத் தருணத்தில், நெடுநாள் காத்திருந்த கடவுளின் ஆட்டுக்குட்டியாக அவர் இருந்தார். அவருக்கு முன்பு வந்த மற்றெல்லா சிறிய ஆட்டுக்குட்டிகளும் அவரையே சுட்டின மேலும் அவரின் வருகைக்காகவும் நிறைவேறுதலுக்காகவும் காத்திருந்தன.

10. ''கடவுளின் ஆட்டுக்குட்டி'' இயேசு என்ற இந்தப் புரிதல், நற்செய்திகளின் பாடுகளின் நிகழ்வுரைகளில் மிக வெளிப்படையாகத் தெரிகிறது.

யோவான் நற்செய்தியில், பாஸ்கா விழாவுக்குத் தயாரிப்பு செய்யும் நாளின் நண்பகலில் அல்லது ''ஆறாம் மணியில்'' பிலாத்து இயேசுவுக்கு மரணத் தீர்ப்பு வழங்கினார் (யோவா 19:14-16), அது துல்லியமாக கோயிலில் குருக்கள் பாஸ்கா ஆட்டுக்குட்டிகளைக் அடிக்கும் (வெட்டும்) நேரம்.

இயேசு சிலுவையில் அறையப்பட்டப் பிறகு, மறைநூலில் விதிக்கப்பட்டது நிறைவேறுமாறு இயேசுவின் எந்த எலும்பும் முறிக்கப்படவில்லை என்று யோவான் 19:31-36 பதிவு செய்கிறது.

பாஸ்கா ஆட்டுக்குட்டிகளின் எந்த எலும்பும் முறிக்கப்படக் கூடாது என்று விடுதலைப்பயணம் 12:46 மற்றும் எண்ணிக்கை 9:12ல் விதிக்கப்பட்டதை ஒத்துள்ளது. சிலுவையில் அறையப்பட்ட குற்றவாளிகளை முன்கூட்டியே மூச்சுத்திணறலால் கொல்லும் நோக்கத்துடன் படைவீரர்கள் அவர்களின் கால்களை முறித்தனர். எனினும், அவர்கள் இயேசுவிடம் வந்தபோது, ஏற்கெனவே அவர் இறந்திருந்தார். படைவீரர்களில் ஒருவர் இதை உறுதி செய்ய இயேசுவின் விலாவில் ஈட்டியால் குத்தினார்.

இஸ்ரயேலரின் வீடுகளின் நிலைக்கால்களிலும் மேல்சட்டத்திலும் ஆட்டுக்குட்டியின் குருதியைத் தெளிக்க ஈசோப்பு கொத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று விடுதலைப்பயணம் 12:22 கூறுகிறது. யோவான் 19:29ல், இயேசு எப்படி பலி ஆட்டுக்குட்டியாகக் காட்டப்படுகிறார் என்று நாம் காண்கிறோம்: ‘‘அங்கே ஒரு பாத்திரம் நிறையப் புளித்த திராட்சை ரசம் இருந்தது; அதில் கடற்பஞ்சை நன்கு தோய்த்து ஈசோப்புத் தண்டில் பொருத்தி அதை அவர்கள் அவரது வாயில் வைத்தார்கள்.’’

தவிர்க்க இயலாதவாறு, தமது தூய மறைநூலைத் தீவிரமாக எடுத்துக்கொள்ளும் ஒவ்வொரு கிறிஸ்தவரின் நம்பிக்கையாக இது இருக்கிறது உண்மை, அதாவது இயேசு உண்மையாகச் சிலுவையில் அறையப்பட்டார், மேலும் அவரது சிலுவையறைவு உலகின் பாவங்களுக்கான கழுவாய் பலியாக அமைந்தது. திருத்தூதரான புனித பேதுரு நமக்கு அறிவுறுத்துகிறார், ‘‘உங்கள் மூதாதையரிடம் இருந்து வழிவழியாய் வந்த வீணான நடத்தையினின்று உங்களை விடுவிக்கக் கொடுக்கப்பட்ட விலையீடு என்னவென்று உங்களுக்குத் தெரியும். அது பொன்னும் வெள்ளியும் போன்று அழிவுக்கு உட்பட்டதன்று; மாறாக, மாசு மறுவற்ற ஆட்டுக்குட்டியைப் போன்ற கிறிஸ்துவின் உயர்மதிப்புள்ள குருதியாகும்’’ (1பேது 1:18-19). நம்மை அன்பு செய்த அதே கிறிஸ்துவே இந்த விலையீட்டைச் செலுத்தினார், ‘‘தம்மை நறுமணம் வீசும் பலியும் காணிக்கையுமாக கடவுளிடம் ஒப்படைத்தார்’’ (எபே 5:2).

11. இயேசு கிறிஸ்துவின் மீட்புச் செயல் இஸ்ரயேலுக்கு மட்டுமன்றி மனிதகுலம் முழுவதற்கும் நன்மையானது என்பது பின்னர் வெளிப்படுத்தப்படும் (மத் 28:16-20).

12. திருச்சபையில் இன்று நாம் சிறப்பிக்கும் ஒவ்வொரு திருப்பலியும் ஒரு பாஸ்கா பலியாக இருந்தாலும், நாம் ஒருபோதும் விலங்குகளை ஒவ்வொரு பலிக்காக வெட்டுவதில்லை. இது ஏனெனில் இயேசு ஏற்கெனவே நமது பாவங்களுக்கு கழுவாயாகத் தேவைப்பட்ட பலியின் இறுதி நிறைவேறுதலாக இருக்கிறார். ஒவ்வொரு திருப்பலியிலும் அவரை நாம் மீண்டும்மீண்டும் கொல்வதில்லை, ஏனெனில் அவரது பாடுகளின் (துன்பங்களின்) பலி, சிலுவையறைவு மற்றும் இறப்பு ஏற்கெனவே ஒருமுறை எல்லாருக்கும் நன்மையாக நிகழ்ந்தது, அதன் விளைவுகள் தேவைக்கும் அதிகமானவை மற்றும் என்றும் நிலைத்திருப்பவை. ஒவ்வொரு திருப்பலியிலும், இயேசு செய்த அதே பணியின் அடிப்படையில் குரு பலி செலுத்துவதைத் தொடர்கிறார்.

*ரோமைத் திருப்பலி நூலில் இருந்து:*

‘‘சகோதர சகோதரிகளே, என்னுடையதும் உங்களுடையதுமான இப்பலியை எல்லாம்வல்லத் தந்தையாம் கடவுளுக்கு ஏற்புடையதாகும்படி செபியுங்கள்.’’

‘‘ஆண்டவர் தமது திருப்பெயரின் புகழ்ச்சிக்காகவும் மாட்சிக்காகவும், நமது நன்மைக்காகவும், தமது தூய திருச்சபை அனைத்தின் நலனுக்காகவும் உமது கைகளினின்று இப்பலியை ஏற்றுக்கொள்வாராக.’’

13. ஆனால் திருப்பலியில், ஆண்டவரை வழிபடும் நாம் இயேசுவோடு இணைந்து நம்மையும் பலிகளாகச் செலுத்துகிறோம். புனித பவுல் தருகின்ற சிறந்த கட்டளை இதுவே: ‘‘சகோதர சகோதரிகளே, கடவுளுடைய இரக்கத்தை முன்னிட்டு உங்களை நான் வேண்டுகிறேன்; கடவுளுக்கு உகந்த, தூய, உயிருள்ள பலியாக உங்களைப் படையுங்கள்; உணர்வுள்ள மக்களாக, இதுவே உங்களுக்கான வழிபாடு’’ (ரோமை 12:1).